செயற்பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து., 18-ஆம் கால்வாய் நீட்டிப்பு சிறப்புக் கோட்டம் தேனி அவர்களின் செயல்முறை ஆணைகள்.

பிறப்பிப்பவர் : பொறிஞர். மா. கார்த்திகேயன், பி.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து., (கூ/பொ).,

**செயல்முறை ஆணை எண் : பஎ-3 / கோ-16 / 2020 / நாள்:05.01.2021**

| | | |
|---|---|---|
| **பொருள்:** | தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி – கீழ்நிலைப் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலமாக (By Transfer) இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்தது – 2019-2020ஆம் ஆண்டிற்கான பதவி உயர்வுக்கு தேர்ந்த பெயர்ப் பட்டியலிலிருந்து பதவி மாற்றம் மூலமாக திரு.சு.சிவக்குமார் (பிறந்த தேதி 12.04.1980), பாசன உதவியாளர் பதவி உயர்வில் இளநிலை உதவியாளராக பணியேற்றது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தல் – தொடர்பாக. | |
| **பார்வை:** | 1. | முதன்மைத் தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். எஸ்3(3)/20343/2020, நாள்:29.07.2020. |
| | 2. | இக்கோட்ட அலுவலக கடித எண். பஎ-3 / கோ-16 (529) / 2020, நாள்: 21.09.2020. |

•••••

பார்வை 1-இல் காணும் முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி, 2019-2020ஆம் ஆண்டிற்கான கீழ்நிலைப் பதவியிலிருந்து பதவி மாற்றம் மூலமாக (By Transfer) இளநிலை உதவியாளராக பதவி உயர்வுக்கு ஒப்பளிக்கப்பட்ட தேர்ந்த பெயர்ப் பட்டியலிலிருந்து பதவி மாற்றம் மூலமாக இளநிலை உதவியாளராக பதவி உயர்வு பெற்ற திரு.சு.சிவக்குமார் (பிறந்த தேதி 12.04.1980) இக்கோட்டக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து., 18-ஆம் கால்வாய் நீட்டிப்பு சிறப்புக் கோட்டம், தேவாரம் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன்படி திரு.சு.சிவக்குமார், பாசன உதவியாளர் பதவி மாற்றம் மூலம் பதவி உயர்வு பெற்று இளநிலை உதவியாளராக 16.09.2020 முற்பகல் பணியேற்றார். எனவே, அன்னார் தமிழ்நாடு அரசுப்பணியாளர் நடைமுறை நூல் மற்றும் மாநில சார்நிலைப் பணிக்கான பொது விதி 23(அ)-இன்படி தமிழ்நாடு எழுத்துப் பணியாளர் தொகுதியில் **இளநிலை உதவியாளர் பதவியில் 16.09.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்படுகிறார்.**

த.பி.பா..

| வ. எண் | பெயர் (திருவாளர்) | பதவி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | சு.சிவக்குமார் (பிறந்த தேதி 12.04.1980) | இளநிலை உதவியாளர் | 16.09.2020 முற்பகல் | 16.09.2020 முற்பகல் |

தனியர் அவர்தம் பணியில் 16.09.2020 முற்பகல் முதல் தொடர்ந்து மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

தனியர் தனது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறவேண்டும் என்றும், மாவட்ட அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

இப்பணிவரன்முறை ஆணை எதிர்கால வழிகாட்டுதலின்படி மாறுதலுக்கும், திருத்தங்களுக்கும் உட்பட்டது என்ற நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

8/1/21

செயற்பொறியாளர், பொ.ப.து, நீ.ஆ.து., (கூ/பொ).,
18-ஆம் கால்வாய் நீட்டிப்பு சிறப்புக் கோட்டம்,
தேனி.

08/01/2021

**பெறுநர்:**
திரு. சு. சிவக்குமார்,
இளநிலை உதவியாளர்,
18-ஆம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு உபகோட்டம்,
தேவாரம்.
**(வழி)** உதவி செயற்பொறியாளர், பொ.ப.து., நீ.ஆ.து.,
18-ஆம் கால்வாய் நீட்டிப்பு சிறப்பு உபகோட்டம்,
தேவாரம்.

/ சான்றொப்பம் /

நகல் :- இருப்பு கோப்பு பஎ-3
நகல் :- கண்காணிப்பாளர்